2011 செப்டம்பர் 8] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்—விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32—ஐ 10—9—2011 (சனிக்கிழமை) அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

10—9—2011 (சனிக்கிழமை) அன்று வினாக்கள்—விடைகள் நேரம் இல்லை.

8. ஓணம் பண்டிகை—பேரவைத் தலைவரின் வாழ்த்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை ஓணம் பண்டிகையைக் கொண்டாடும் மலையாள மக்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் வாழ்த்துகளைத் தெரிவிப்பதோடு, பேரவை உறுப்பினர்களின் வாழ்த்துகளோடு என் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 10—9—2011 (சனிக்கிழமை) காலை 10—00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2—17 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.